**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 331/2022**

Prosecution witness : 5

| | | | |
|---|---|---|---|
| Name: | இசக்கியம்மாள் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 05.11.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தூத்துக்குடி திரேஸ்புரத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் வேலைக்கு செல்லவில்லை. வீட்டில் தான் இருப்பேன். எங்களுக்கு சொந்தமாக ஒரு வள்ளம் இருந்தது. அதை பத்து வருடங்களுக்கு முன்னர் விற்றுவிட்டோம். அந்தவள்ளத்திற்கான கார்டு என் பெயரில் இருந்தது அதன் நம்பர்-2669 ஆகும். எங்களால் தொழில் பார்க்க முடியாததால் இராமேஸ்வரத்தை சேர்ந்த ஒரு நபருக்கு என் கணவர் விற்றுவிட்டார். அந்த அட்டையை ஒப்படைக்க வேண்டும் என்று எனக்கு தெரியாததால் அதை நான் வீட்டில் வைத்திருந்தேன். என் கணவர் குடிபழக்கம் உள்ளவர். போதையில் அந்த அட்டையை அந்தோணி பிச்சை என்பவருக்கு கொடுத்துவிட்டார். அவர் வீட்டில் சென்று அந்த அட்டையை திரும்ப கேட்டபோது அவர் கொண்டுபோய்விட்டதாக கூறினார். பார்த்து எடுத்து தருவதாக சொல்லியும் தரவில்லை. திடீரென வந்து எனது வள்ளம்

பிடிபட்டதாக விசாரித்தார்கள். அப்போது வள்ளம் எங்களிடம் இல்லை என்றும் வள்ளத்தை பத்துவருடத்திற்கு முன்னர் விற்றுவிட்டதாக கூறினேன். என்னை போலீசார் விசாரித்தார்கள். மேற்படி அந்தோணிபிச்சையிடம் அந்த கார்டை ஒப்படைத்தேன். ஆஜர் எதிரி -1.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் என்ன சொல்லவேண்டும் என்று எனக்கு சொல்லிக் கொடுத்தார்கள். நான் அவர்கள் சொல்லிக்கொடுத்ததை தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நடந்ததை சொல்கிறேன். என் வீட்டிற்கு கதவுஎண், தெரு பெயர் உள்ளது. எனக்கு ஆதார் அடையாள அட்டை, குடும்ப அட்டை உள்ளது என்றால் சரிதான். நான் தான் இசக்கியம்மாள் என்பதைக்காட்டும் ஆதாரத்தை போலீசார் என்னிடம் வாங்கி பார்க்கவில்லை. வள்ளத்தை முதலில் பிடித்தபோது எனது ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ், வாங்கி சென்றார்கள். நான் முதல் விசாரணையில் சொன்ன 2669 என்ற அட்டை டீசல் மானிய அட்டை என்றால் சரிதான். வள்ளங்களை பதியக்கூடிய அலுவலகம் எங்கு இருக்கிறது, அதற்கு என்ன ஆவணங்கள் கொடுக்கவேண்டும் என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மீன் பிடிப்பவர்களுக்கு பொதுவாக அடையாள அட்டை கொடுத்திருப்பார்கள் என்றால் சரிதான். எனது கணவர் மீன்பிடி தொழில் செய்வதை காட்டும் அடையாள அட்டையை போலீசார் வாங்கி பார்க்கவில்லை. அந்த அடையாள அட்டை இருந்தால் தான் கடலுக்குப்போய் மீன் பிடிக்கமுடியும் என்றால் சரிதான். பொதுவாக, வள்ளம், மற்ற வகையான படகுகள் எதுவும் அரசின் சான்றிதழ் இல்லாமல் கடலுக்குள் பயன்படுத்த முடியாது. அடிக்கடி வள்ளங்களை பிடித்து அதிகாரிகள் சோதனை செய்வார்கள் என்றால் சரிதான். பத்து வருடங்களுக்கு முன்னர் வள்ளத்தை விற்ற விபரத்தை நான் போலீசாரிடம் விசாணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வள்ளத்தை விற்றுவிட்டோம்என்றும்,

மீன்பிடிதொழிலுக்கு செல்லவில்லை என்ற விபரத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியபடுத்தினோமா என்றால் இல்லை. எனது கணவர் குடிக்கும்போது அந்த அட்டையை அந்தோணிபிச்சையிடம் கொடுத்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது. இதுநாள் வரை மேற்படி அட்டையை 1 ம் எதிரியிடம் இருந்து பெற்றுத்தருமாறு, போலீசாரிடமோ, சம்பந்தப்பட்ட அதிகாரியிடமோ, புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2018 ம் ஆண்டு வள்ளம் சம்பந்தமாக அதிகாரிகளிடம் மனு கொடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களுடைய படகையும் வள்ளம் என்று தான் சொல்வார்கள். ஒவ்வொரு நாளும் கடலுக்குள் செல்லும் முன்னர் மீன்பிடிதுறைமுகத்தில் டோக்கன் பெற்று செல்லவேண்டும் என்றும் திரும்பி வந்தவுடன் தகவல் தெரிவிக்கவேண்டும் என்றால் எங்களது தெருவில் அப்படி நடைமுறை இல்லை. சிறிய போட்டிற்கு தகவல் சொல்லமாட்டோம். பொதுவாக படகை விற்கும்போது அந்த படகை வாங்குபவர்கள் அந்த படகிற்கான ஆவணங்களையும் சேர்த்துதான் கேட்பார்கள் என்றால் சரிதான். ஆனால் எங்கள் வள்ளத்தை விற்கும்போது அத்தகைய ஆவணங்களை தருவதாக சொன்னோம் அவர்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். எந்தவித ஆவணமும் இல்லாமல் வள்ளத்தை யாரும் வாங்கி செல்லமாட்டார்கள் என்றும் ஆவணம் இல்லாமல் தொழில் செய்யமுடியாது என்றும் அவர்கள் வாங்கவில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது வள்ளத்திற்குரிய அட்டையை 1 ம் எதிரி தவறாக பயன்படுத்துகிறார் என்ற விபரம் போலீசார் என்னிடம் சொல்லியபிறகு தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் என்னுடன் தான் வசித்துவருகிறார். எனது கணவரை விசாரித்தால் அட்டை கொடுக்கபட்டது, திருப்பி கேட்டது அது எதனால் கொடுக்கப்பட்டது என்ற விபரம் எல்லாம் தெரியவரும் என்றால் சரிதான். என்னை வழக்கு சம்பந்தமாக போலீசார் வீட்டிற்கு வந்தார்களா, விசாரித்தார்களா என்றால்

பிடிபட்டவுடன் வந்து விசாரித்தார்கள். இந்த வழக்கிற்கு பிறகும் அந்த அட்டையை அந்தோணிபிச்சை தவறாக பயன்படுத்துகிறார் என்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். நான் சொன்னதை எழுதினார்களா, நான் கையெழுத்து செய்தேனா என்றால் எழுதினார்கள், நான் கையெழுத்து செய்தேன். அதன் பின்னர் நான் இன்றுதான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் தெரியாத நபருக்கு போட்டை விற்றோம், அவரிடம் ஆவணங்களை கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் குடிபழக்கத்தின் காரணமாக அந்தோணிபிச்சையிடம் கார்டை கொடுத்ததாகவும், அவரிடம் திருப்பி கேட்டபோது அவர் தேடி தருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்கள் வழக்கிற்கு சாதகமாக தயாரித்த வாக்குமூலத்தை அவர்கள் சொல்லிக் கொடுத்தன் பேரில் நடந்ததாக கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்தோணிப்பிச்சையை எனக்கோ, என் கணவருக்கோ நேரடியாக தெரியாது என்றாலும், பின்னிட்டு அவரை அடையாளம் காட்டியதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் போலீசார் சொல்லிக்கொடுத்ததுபோல் சொல்லவில்லை என்றால் வள்ளம் தொடர்பாக என் மீது வழக்கு வந்துவிடும் என்ற அச்சத்தில் போலீசார் பயமுறுத்தியதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன சாட்சியம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட வள்ளம், மற்றும் ஆவணங்கள் குறித்த விசயங்கள் எனது கணவரை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான்.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வைத்திருந்த வள்ளம் யாரிடமிருந்து , எந்த வருடம், எவ்வளவு தொகைக்கு வாங்கினோம் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அதற்கு அரசாங்கத்திடமிருந்து முறையான அனுமதி பெறப்பட்டதா என்ற விபரம் எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். நாங்கள் வாங்கிய வள்ளம் புதிதான வள்ளமா, பயன்பாட்டில் இருந்த பழையவள்ளமா என்ற விபரமும் எனது கணவருக்குத்தான் தெரியும் என்றால் பழைய வள்ளம் என்று எனது கணவர் சொல்லி எனக்கு தெரியும். ஒரு பொருள் வாங்கினாலோ, விற்றாலோ எங்கள் ஊரில் எழுதிக்கொள்வது வழக்கமா என்றால் ரொக்கமாக விற்றாலோ, வாங்கினாலோ எழுதிக்கொள்ளும் வழக்கம் இல்லை. கடனாக கொடுத்தால் எழுதிக்கொள்ளும் வழக்கம் உண்டு. வள்ளம் வாங்கியது குறித்தோ, விற்பனை செய்தது குறித்தோ எந்தவிதமான அசல் ஆவணமும் எங்களிடம் இல்லை என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வள்ளத்தை வாங்கியபோது அதை விற்பனை செய்தவர் அசல் ஆவணங்களை பெற்றுக்கொண்டாரா என்றால் ரெம்ப வருடம் ஆனதால் எனக்கு நினைவில்லை. வள்ளத்தை நான் வாங்கியபோது அதற்கான அட்டையை நான் வாங்கவில்லை. புதிதாக விண்ணப்பித்து அட்டை வாங்கினேன்.

**<u>3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

**<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2 ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொல்லப்பட்டது.

**<u>5 ம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**